# பத்திரிக்கை செய்தி

## ஆவணத்தை ரத்து செய்து தருவதற்காக ரூ.40,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய பூந்தமல்லி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்க செயலாளர் கைது

புகார்தாரர் திரு.கிருஷ்ணமூர்த்தி திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய தந்தையார் ஏற்கனவே பூந்தமல்லி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் தனது வீட்டு பத்திரத்தை 1999ம் ஆண்டு அடமானம் வைத்து ரூ.80,000/-யை பெற்றுள்ளார். இந்த அடமான பத்திரத்தை பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்துள்ளார். கடந்த 2009ம் ஆண்டு மொத்த அடமான கடனையும் பூந்தமல்லி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் கட்டி முடித்து நில ஆவண பத்திரத்தை பெற்றுள்ளார். ஆனால் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி அடமானம் தொடர்பாக பதிவு செய்த பத்திரத்தை ரத்து செய்யாமல் இருந்துள்ளார். கடந்த 2023ம் ஆண்டு புகார்தாரரின் தந்தை காலமாகிவிட்டார். இந்நிலையில் புகார்தாரர் மேறபடி ஆவண பத்திரத்தை ரத்து செய்து தருமாறு திரு.ஆறுமுகம், செயலாளர், அம்பத்தூர் வெங்கடாபுரம் கூட்டுறவு பில்டிங் சொசைட்டி லிமிடெட், அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம், பொறுப்பு பூந்தமல்லி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் அவர்களிடம் விண்ணப்பம் செய்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ..40,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 12.07.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஆறுமுகம், செயலாளர், அவர்கள் லஞ்ச பணம் ரூ.40,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.